*7*

**சிம்ரி**

# அறுவடையின் விதி

*வேதபாடப் பகுதி: 1 இராஜாக்கள் 16:8-20*

*சிம்ரி: நீங்கள் இவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? நாம் யோசேப்பை அவரது தூய்மைக்காகவும், ஆபிரகாமை அவரது விசுவாசத் திற்காகவும், சவுலை அவரது தோற்றத்திற்காகவும், தாவீதை அவரது இருதயத்திற்காகவும் நினைவில் வைத்திருக்கின்றோம் - ஆனால் நீங்கள் சிம்ரியைப் பற்றி நினைக்கும்போது உங்கள் சிந்தைக்கு வருவது என்ன? அனேகமாக ஒன்றுமில்லை. சிம்ரி என்ற பெயர் மேல்வரும்போது நாம் ஒரு வெறுமையைத் தரவழைக்கின்றோம் என்பதற்கு, அவர் வேதவசனங்களில் நீடித்து நிலைப்பதில்லை என்பதே காரணமாக உள்ளது. அவரது ஆட்சிக்காலம் கண்ணிமைக்கும்பொழுது மாத்திரமே, அதாவது, கி.மு. 885ல் ஒரு வாரம் மாத்திரமே நீடித்தது. இது வடக்கில் ஆண்ட அரசர்கள் எல்லாருடைய ஆட்சிக்காலத்திலும் மிகச்சிறியதாகும். அவர் ஒரு உண்மை யான அரசராய் இருக்கவில்லை என்றும்கூட நம்பப்பட வைக்க முடியும்; அவர் அரசராகப் "போகின்றவராக" மாத்திரம் இருந்தார், அவர் ஒரு கணநேரம் மாத்திரம் பட்டத்தில் இருந்தார், அவர் வடக்கு ராஜ்யத்தின் அரசர்களினுடைய பட்டியலில் உள்ளடக்குதல் என்ற விஷயத்தினால் மேன்மைப்படுத்தப்படத் தகாதவராய் இருந்தார்.*

*அவரைப் பற்றிய தெய்வீக வரலாற்றுக்குறிப்பு, ஆறு வசனங்கள் மாத்திரமே கொண்டதாக, ஒரு குறுகிய, இரங்கத்தக்க வரலாறாக உள்ளது:*

> *யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்திலே சிம்ரி திர்சாவிலே ஏழுநாள் ராஜாவாயிருந்தான்; ஜனங்கள் அப்பொழுது பெலிஸ்தருக்கு இருக்கிற கிபெத்தோனுக்கு எதிராகப் பாளையமிறங்கியிருந்தார்கள். சிம்ரி கட்டுப்பாடுபண்ணி, ராஜாவைக் கொன்றுபோட்டான் என்பதை அங்கே பாளையமிறங்கின ஜனங்கள் கேட்டபோது, "இஸ்ரவேலரெல்லாம் அந்நாளிலேதானே பாளையத்திலே படைத்தலைவனாகிய உம்ரியை இஸ்ரவேல்மேல் ராஜா வாக்கினார்கள்." அப்பொழுது உம்ரியும் அவனோடேகூட இஸ்ரவேல் அனைத்தும் கிபெத்தோனிலிருந்து வந்து, திர்சாவை முற்றிக்கை போட்டார்கள். பட்டணம் பிடிபட்டதைச் சிம்ரி கண்டபோது, அவன் ராஜாவின் வீடாகிய அரமனைக்குள் பிரவேசித்து, தான் இருக்கிற ராஜ அரமனையைத் தீக்கொளுத்தி, அதிலே செத்தான். அவன் கர்த்தரின் பார்வைக்குப்*

> *பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின அவன் பாவத்திலும் நடந்ததினால், கட்டிக்கொண்ட அவனுடைய பாவங்களினிமித்தம் அப்படி நடந்தது (16:15-19).*

*சிம்ரி, யெரொபெயாமின் வழிகளைப் பின்பற்றுபவராய் இருந்தார். அவர் சட்டத்திற்குப் புறம்பான வகையில் அரியணையைக் கைப்பற்றி இஸ்ரவேல் மக்கள்மீது ஆளுகை செய்ய முயற்சித்தார், ஆனால் அவரது முயற்சி, ஒரு இருண்ட எதிர்காலமாக, ஏழுநாள் மாத்திரமே நீடித்ததாக இருந்தது. அவர் அவ்வாறு அரியணையைக் கைப்பற்றிய வேளையில், இஸ்ரவேலின் இராணுவங்கள், பெலிஸ்தர்களிடமிருந்து "உள்ளாக இருந்த முள்" என்ற வகையில் இருந்த தங்கள் நகரமான கிபெத்தோனை மீட்கும் முயற்சியில் அதை முற்றிக்கை போட்டிருந்தன. இஸ்ரவேலின் இராணுவம், மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றிருந்த உம்ரி என்பவரால் வழிநடத்தப் பட்டிருந்தது. சிம்ரி, ஏலாவைக் கொன்றார் என்பதைக் கேள்விப்பட்ட போது, மக்கள் உம்ரியை "இஸ்ரவேல் அனைத்தின்மேலும்" அரசராக்கினர். சிம்ரி தம்மைத்தாமே அரசராக அபிஷேகம் செய்வித்துக்கொண்டதை ஆதரிக்க ஒரு சிறு மக்கள் கூட்டத்தையே பெற்றிருந்தார் என்பது உறுதி, எனவே சிம்ரியைக் கையாளுதல் என்பதே உம்ரி செய்ய வேண்டிய முதல் வேலையாயிருந்தது. அவர் உடனடியாகத் திர்சாவை நோக்கி அணிவகுத்துப் புறப்பட்டு வந்து, திர்சா நகரத்தைச் சுற்றிச்சூழ்ந்தார். சிம்ரி தமக்கு ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலையைக் கண்டு, தாம் நாசமாகப் போவதை உணர்ந்தறிந்து, விட்டுக்கொடுத்தார். அவர் அரமனைக்குள் தம்மைப் பூட்டிக்கொண்டு தீக்கொளுத்தி, அதைத் தீக்கிரையாக்கி, தமது உயிரை மாய்த்துக்கொண்டார். அவர் மகிமையின் பிழம்பாக வெளிச்செல்வதற்குப் பதிலாக, புகையாக எழும்பித் தாழ்ந்தார்.*

*இவ்விதமாக, சிம்ரி ஆட்சியை அபகரித்து அதன்மூலம் அரியணைக்கு வந்தார், பின்பு அவர் அதே விதமான அபகரிப்பினால் அரியணையில் இருந்து இறக்கப்பட்டார். அவர் ஏலாவுக்குச் செய்திருந்ததை, அவருக்கு உம்ரி செய்தார். அவர் பொன்விதியைத் தலைகீழாக அனுபவித்தார்: "நீங்கள் மற்றவர்களுக்குச் செய்ததின்படியே, உங்களுக்கும் செய்யப்படும்." முடியரசராக "இருக்க வேண்டியவர்" தாம் கொல்லப்படப்போவதைக் கண்டபோது தற்கொலையில் பலியானவர் ஆனார். அவரது மரணம் என்ற நிகழ்ச்சி அவர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பாயிருந்தது என்று பரிசுத்த ஆவியானவரால் விளக்கப்படுகிறது:*

> *அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின அவன் பாவத்திலும் நடந்ததினால், கட்டிக்கொண்ட அவனுடைய பாவங்களினிமித்தம் அப்படி நடந்தது (16:19).*

*ஆட்சிபுரிவதற்கு சிம்ரி செய்த குறுகிய முயற்சியானது நம்மை, ஒவ்வொரு நபரும் விரைவாகவோ அல்லது தாமதமாகவோ அறுவடையின்*

*விதியை எதிர்கொள்ள வேண்டும் என்ற விஷயம் பற்றி நினைக்கச் செய்ய வேண்டும்: எல்லாரும் எதிர்கொள்ள வேண்டியது போன்றே, சிம்ரியும் இந்த விதியை எதிர்கொண்டு இதனால் நொறுக்கப்பட்டார். அறுவடையின் இந்த விதியானது நம்மை "கட்டியெழுப்புமா" அல்லது "நொறுக்கிப்போடுமா" என்பது, இதை நோக்கிய நமது அணுகுமுறையைப் பொருத்தது ஆகும். சிம்ரியின் சுருக்கமான ஆட்சியின் பின்னணியில் நாம் இந்த விதியின் பல்வேறு அம்சங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமாக.*

## அறுவடை: நாம் விதைத்ததை அறுத்தல்

*நாம் எதை விதைத்தோமோ அதையே அறுக்கின்றோம் என்பதே இந்த விதியைப்பற்றி சிம்ரி கண்டறிந்த முதல் உண்மையாக உள்ளது. அவர் செய்திருந்த விதைப்பினாலேயே அறுவடை தீர்மானிக்கப்பட்டு இருந்தது. அவர் வன்முறையையும் கொலையையும் விதைத்து அது சரியானவற்றை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வந்தார், மற்றும் விரைவிலேயே அவர் தமது வாழ்வு உண்டாக்கிய விளைவுகளை அறுத்தார். இயேசு, "... பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்" என்று கூறினர் (மத்தேயு 26:52). விதையானது ஒரு முறை விதைக்கப்பட்ட பின்பு மாற்றப்பட முடியாது, மற்றும் அறுவடையும் மாற்றப்பட முடியாது. இரவைத் தொடர்ந்து பகல் வருவது போன்று விதைப்பிலிருந்து அறுவடை வளரும். இந்த உண்மையைப் பவுல் பின்வருமாறு வலியுறுத்தினார்:*

> *மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான் (கலாத்தியர் 6:7, 8).*

*இந்த பூமியில் உள்ள மனிதர் ஒவ்வொருவரும், சிந்தனைகள், சொற்கள், மற்றும் செயல்கள் என்ற விதைகளை விதைக்கின்றோம், அவை பிற்பாடு வளர்ந்து, இந்த வாழ்வில் சில விளைவுகள் வருகின்றன மற்றும் சில விளைவுகள் நித்தியத்தில் வருகின்றன.*

*நாம், வாழ்வு என்பது எவ்வாறு நியாயமற்றதாக உள்ளது என்பது பற்றிப் பேச விரும்புகின்றோம். விசேஷமாக, நாம் வாழ்வில் சிலவிஷயங்கள் தவறாகும்போது இந்தச் சிந்தனையை வெளிப்படுத்த விரும்புகின்றோம். உதாரணமாக, நம்மால் நேசிக்கப்படுகின்ற ஒருவர் நல்ல வாழ்வை வாழ்ந்திருந்து வியாதிப்படுகிறபோது, நாம் "அது நியாயமல்ல!" என்று கூறுகின்றோம். ஆம், வாழ்வு நியாயமற்றதாகக் காணப்பட்ட வேளைகளை நான் அறிந்திருக்கிறேன்; ஆனால் பெரும்பான்மையான மக்களுக்கு, வாழ்வு என்பது குறிப்பிடத்தக்க வகையில் நியாயமுள்ளதாக இருக்கிறது. அது வழக்கமாக, நாம் கொடுத்ததைத் திரும்பக் கொடுக்கிறது. வாழ்வின் பொதுவான விதி என்பது, நாம் அவ்விதியை விட்டுத் தூரத்தில் சென்றுவிடக் கூடாததாக உள்ளது, அது நாம் விதைத்ததை அறுப்போம்*

*என்ற விதியே ஆகும். பிளேட்டோ என்ற அறிஞர் துன்மார்க்கம் பற்றி இந்த உண்மையைக் கண்டார், அது "துன்மார்க்கமும் அதற்கு ஏற்ற பலனும் ஒன்றாக உறுதியாய் இணைக்கப்பட்டுள்ளன" என்ற அவரது உறுதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எந்த இடத்திலும், எல்லாக் காலங்களிலும் உள்ள எல்லா மனிதர்களும், வாழ்வின் அனுபவங்களினுடைய சாட்சியத்தைத் தெளிவாய்க் கையாளும்போது இந்த உண்மையை உணர்ந்து அறிகின்றனர். "ஆயிரக்கணக்கான பசுக்களின் மத்தியில் ஒரு கன்றுக்குட்டி தனது தாயைக் கண்டறிவது போலவே, ஒரு செயலானது அதைச் செய்பவரைக் கண்டறிந்து வருகிறது" என்ற பழங்கூற்று ஒன்றை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.*

*யாரேனும் ஒருவர், "ஆனால் நான் இதற்கு விதிவிலக்குகளைக் கண்டிருக்கின்றேன்! துன்மார்க்கனான ஒரு மனிதன் நன்றாயிருப்பதை நான் அறிந்திருக்கின்றேன்" என்று விவாதிக்கலாம். இவ்வகையான விவாதம் எழுப்பப்படுதல், இதுவே முதன்முறையல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பு சங்கீதக்காரர் இதே விதமான விவாதம் ஒன்றை ஏற்படுத்தினார் (சங்கீதம் 73). அவர் துன்மார்க்கர் செழித்திருப்பதாகக் காணப்படுவதையும் நீதிமான்கள் துன்புற்று இருப்பதையும் கண்டார். சங்கீதக்காரர் உற்று நோக்கியபடி, இந்த முரண்பாட்டில், சில அறுப்புகள் உடல்ரீதியான கண்களால் காணப்பட இயலாத வகையிலும் செல்லுகிறது என்பதே இதன் தவறாக உள்ளது. இந்த வாழ்விலேயே நாம் எல்லா அறுப்புகளையும் செய்து விட மாட்டோம் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். அறுவடையின் சிலபகுதி இங்கே செய்யப்படுகிறது, ஆனால் அதன் பெரும்பான்மையான பகுதி நித்தியத்தில் செய்யப்படும்.*

*நீங்கள் எதை விதைக்கின்றீர்களோ அதையே அறுப்பீர்கள் என்பது வாழ்வதற்கான அடிப்படை விதியாக உள்ளது - நட்புறவாடும் மக்கள் அதிக நண்பர்களைக் கொண்டுள்ளனர், ஊக்கமுள்ள மக்கள் வெகுமதிகளைப் பெறுகின்றனர், நேர்மையான மக்கள் நம்பிக்கையைப் பெறுகின்றனர், முதலியன. தெளிவான விதிவிலக்குகள் இங்கும் அங்குமாக உள்ளன. நாம் யாவரும் அவற்றைக் கண்டுள்ளோம், ஆனால் விதிவிலக்குகளாகத் தோற்றம் தருபவையும்கூட கடைசியில் அறுவடைக்காலம் ஒன்றிற்கு வரும் - அது இந்த வாழ்வில் நடைபெறாவிட்டாலும், நித்தியத்தில் நிச்சயம் நடைபெறும்.*

*சிம்ரி, அறுவடையின் இந்த விதியைப்பற்றி அறியாதிருந்தாலும் அல்லது அதை அறிந்தும் புறக்கணித்திருந்தாலும், அந்த விதியானது அவரது வாழ்வில் செயல்பட்டது: அது அவர் வாழ்வில் முதலீடு செய்திருந்த பணத்தின் நாணயத்தைக்கொண்டு அவருக்குத் திருப்பிச் செலுத்திற்று. அவர் பிறரிடம் நடந்து கொண்டவிதமாகவே தாமும் நடத்தப்பட்டார். இந்த விதியானது இதேபோன்று உங்களுக்கும் எனக்கும் செயல்படும். விதியைப்பற்றி அறியவில்லை என்று வேண்டுகோள் விடுப்பது பயனற்றது. விதியைக் கண்டுகொள்ளாது விடுதல் என்பது நம்மை மன்னித்துவிடாது. இந்த விதியை உணர்ந்தறிந்து, சிம்ரி செய்யாதிருந்த விஷயமான, தேவபக்தியுள்ள வாழ்வின் நேர்மறையான விதையை விதைத்தல் என்பதே இந்த விதியைக்*

கையாளும் ஒரே வழியாக உள்ளது.

## அறுவடை: நாம் விதைத்ததைவிட அதிகமானதை அறுத்தல்

அறுவடை என்பது விதைத்த விதைகளைவிட பெரியதாயிருக்கிறது மற்றும் அறுவடைக்காலம் என்பது விதைப்பின் காலத்தைவிட நீண்டதாயிருக்கிறது என்பதே இந்த விதியைப்பற்றி சிம்ரி கண்டறிந்த இரண்டாவது உண்மையாக உள்ளது. விதைகள் அளவில் சிறியவையாய் இருக்கின்றன, ஆனால் அவைகள் தங்களின் அளவைக் காட்டிலும் பலமடங்கு அளவிலான அறுவடையை உண்டாக்குகின்றன. ஒரு விதை ஒரு கதிரைக் கொடுக்கிறது, ஒரு கதிர் ஒரு மூட்டைத் தானியத்தைக் கொடுக்கிறது. ஒரு ஆப்பிள்கனியின் விதைகளை நாம் எண்ணிவிட முடியும், ஆனால் ஒரு விதையில் உள்ள ஆப்பிள்கனிகளை நாம் எண்ண முடியாது. அறுவடையானது எப்போதுமே விதைத்ததைவிட அதிகமான தாக உள்ளது. இது உண்மை இல்லையென்றால், பண்ணைத் தொழிலில் அதிக பயன் இருக்காது.

இந்தப் பயங்கரமான அறுவடைக்கு வழிநடத்திய விதைகளை சிம்ரி எப்போது விதைக்கத் தொடங்கினார் என்று நாம் அறிவதில்லை. அவர் தாம் விரும்பிய யாவற்றையும் எடுத்துக்கொள்ள முடியும் என்ற பிசாசுத்தனமான கருத்தைத் தமது இளம்-வயதிலேயே பயிரிடத் தொடங்கினாரா? "நீங்கள் விரும்பியவற்றை எடுத்துக்கொள்ளப் போதிய அளவுக்கு நீங்கள் பெரியவ ராய் இருந்தால், அதை எடுத்துக்கொள்வது சரியானதே" என்ற கருத்தைத் தம் சிறுவயதுக் காலத்திலேயே நம்பத் தொடங்கினாரா? அவர் எப்போது விதைக்கத் தொடங்கினார் என்று நாம் அறிவதில்லை, ஆனால் கொலையின் மூலமாக அரியணையைக் கைப்பற்றும் திட்டத்தைக் கடைசியில் அவர் மனதில் வரைந்தார் என்பதை நாம் அறிகின்றோம். அதன்பின்பு, அவர் தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான காலத்தையும் இடத்தையும் தேடத் தொடங்கினார். திட்டத்தை உண்மையில் செயல்படுத்துதல் விரைவிலேயே நடந்தது. வாய்ப்புக்கான தருணம் வந்தபோது, அரசராகிய ஏலா, ஒரு சில நிமிடங்களிலேயே கொல்லப்பட்டார். கடைசியில், விதைத்தல் என்ற செயல் செய்யப்பட்டது. பின்பு, அறுவடையானது அவர் எதிர்பார்த்ததைவிட மிகவிரைவாக வந்தது - அது என்ன ஒரு அறுவடையாக இருந்தது! அவர் அனுபவித்த அறுவடை நித்தியம் வரைக்கும் நீண்டிருக்கும். இவ்விஷயத்தில், அறுவடை அவர் வாழ்வைப் பறித்து அதை முழு உலகமும் கண்ணோக்கும்படி சேதப்படுத்திற்று. அவர் தாம் மரிக்க வேண்டிய காலத்திற்கு முன்பாக மரித்து, அவரது வாழ்க்கைப் பயணம் முடிவுக்கு வருதலின் துன்பத்தைத் தனிப்பட்ட வகையில் அறிந் திருப்பார். அவர் பிறரின் வாழ்வில் துன்பத்தைக் கொண்டுவந்திருந்தார், அதேபோன்ற துன்பம் அவரது வாழ்வில் வந்து சேரும்.

சிம்ரி சூழ்ச்சியின் தமது செயல்பாட்டை எவ்விதமாகக் கண்ணோக் கினார் என்பது பற்றி நான் வியப்படைகின்றேன். ஒருவேளை அவர்,

"நான் விரைந்து சென்று, ஏலாவைக் கொல்லுவேன், அப்போது விஷயம் முடிந்துவிடும். பின்பு நான் அரியணை ஏறுவேன், இஸ்ரவேல் நாடு முழுவதும் என்னை அரசராகக் கொண்டிருக்க விரும்பும். நான் அரியணையில் பாதுகாப்பான அரசராயிருப்பேன், ஏனெனில் என்னைப் பாதுகாக்க இராணுவம் முழுவதும் எனக்கு இருக்கும். அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்காக எனக்கென்றே உள்ளது. சரியான வேளையில் சரியான நகர்த்துதல்களைச் செய்ய வேண்டும்" என்று நினைத்திருக்கலாம். இது அவரது சிந்தனையாக இருந்தால், அவர் திகைப்பான விஷயம் ஒன்றை வரப் பெற்றார் - அது அறுக்க வேண்டிய விளைச்சலாக இருந்தது. மக்கள் அவரை அரசராகக் கொண்டிருக்க விரும்பவில்லை. மிகமுக்கியமாக, படைத்தளபதியும் அதிகாரத்தில் இருந்த மனிதருமான உம்ரி, அவரை [சிம்ரியை] அரசராகக் கொண்டிருக்க விரும்பவில்லை. அவரது [சிம்ரியின்] சிறுதிட்டமானது - நன்கு தேர்ந்துகொள்ளப்பட்ட காலத்தில் ஒருசில விதைகளை விதைத்தலானது - வெளிப்படையான மரணதண்டனையை அல்லது தனிப்பட்ட விதத்தில் தூக்கிலிட்டுக் கொள்ளுதலைத் தேர்ந்து கொள்ளுதலென்ற எலும்பைச் சிலிர்க்கச் செய்யும் தேர்ந்துகொள்ளுதலை விளைவித்த கனத்த பெருந்துன்பத்தின் வடிவமாக வந்தது. சிம்ரி தமது தோல்வியினால் மூழ்கடிக்கப்பட்டவராகவும் அதைப்பற்றி எதுவும் செய்யச் சக்தியற்றவருமாகி, தமது உயிரைத் தாமே மாய்த்துக்கொள்வதைத் தேர்ந்துகொண்டு, பேரழிவாக இவ்வுலகைவிட்டு வெளியேறினார். தனிமையில் இழுக்கப்பட்டு, அரண்மனையில் இருந்த அறை ஒன்றில் மற்றவர்களின் கண்ணோட்டத்தில் இருந்து ஒளிந்துகொண்டு, அவர் தமது உயிரைத் தாமே மாய்த்துக்கொண்டு, அதன்மூலம் தமது பெயருக்கு இன்னுமொரு கரும்புள்ளியைக் கூட்டினார். அறுக்க வேண்டிய விளைச்சலானது அவருக்கு மிக அதிகமாயிருந்தது.

சிம்ரி தாம் அறியாமலே, தேவனுடைய வசனம் என்ற கண்ணாடி அறையில் வசித்திருந்தார். அறுவடையின் விதியைக் குறித்து சிம்ரி செய்யத் தேர்ந்துகொண்டது என்ன என்பதைத் தெய்வீக, ஏவுதல் பெற்ற வரலாறு என்ற உருப்பெருக்கியின்மூலம், முழு உலகமுமே கவனித்து படிக்கும். அவர், வேதவசனங்களை வாசிக்கும் மக்கள் யாவருக்கும் பாரம்பரியச் சொத்துரிமை ஒன்றைக் கையளிப்பார்: "அறுவடையின் விதியைப் புறக்கணிக்காதீர்கள். நான் அதைப் புறக்கணித்தேன், எனக்கு என்ன நடந்தது என்று பாருங்கள்."

உலகமானது சிம்ரியின் பாரம்பரியச் சொத்தை வாசிக்கையில், அவர் தமது வாழ்வில் விதைத்திருந்த விஷயத்திற்கு, நித்தியத்தில் அறுத்துக் கொண்டு இருக்கின்றார். விளைச்சலானது என்றென்றைக்குமானதாக, தோல்வியில் முடிவுற்ற நித்தியமாக உள்ளது. அவர் அறுத்துக்கொண் டிருப்பார், அறுத்துக்கொண்டிருப்பார், அறுத்துக்கொண்டிருப்பார். உண்மையிலேயே, அவர் விளைச்சலானது விதைத்ததைக் காட்டிலும் பெரியதாக நீண்டதாக இருப்பதைக் கடினமான விதத்தில் கண்டறிந்தார். சிம்ரி செய்த அதே தவறை நீங்களும் செய்யாதிருங்கள்.

நாம் நமது முடிவுகளை மேற்கொள்கின்றோம், ஆனால் நமது

முடிவுகள் நமது அடைவிடங்களைத் தீர்மானிக்கின்றன.

சிந்தனையை விதைத்து,
  பண்பை அறுவடை செய்யுங்கள்.
பண்பை விதைத்து,
  வாழ்வை அறுவடை செய்யுங்கள்,
வாழ்வை விதைத்து,
  அடைவிடத்தை அறுவடை செய்யுங்கள்.

## அறுவடை: மற்றவர்களால் செல்வாக்குச் செலுத்தப்படும் அறுத்தல்

ஒருவருடைய அறுத்தலானது மற்றவர்களின் விதைத்தல் மற்றும் அறுத்தலின் செல்வாக்கைக் கொண்டிருக்க முடியும் என்பது, அறுத்தலின் விதி பற்றி சிம்ரி கண்டறிந்த இன்னொரு உண்மையாக உள்ளது. அவர் உண்மையில், மற்றவர்கள் உண்டாக்கிய பயிர்களில் பங்கேற்றிருந்தார்.

சிம்ரி தமது காலத்தில் தலைதூக்கியிருந்த தத்துவத்தைப் பற்றிய சிந்தனையில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை. அவருக்கு முன்பாக, நாதாப் என்பவர் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி ஏற்கனவே அரங்கேறியிருந்தது (15:25-31). இன்னொரு முன்னுரைத்தல், தீர்க்கதரிசியான யெகூ என்பவரால் ஏற்படுத்தப்பட்டிருந்தது (16:8-13). அந்த நாட்களில் இருந்த நடத்துனர்கள், ஒரு சூழ்நிலையின் வழியை மாற்று வதற்கு பட்டயத்தினால் பொறுப்பை மேற்கொண்டு, அந்த வழியில் உள்ள எவரொருவரையும் கொலை செய்தல் என்பதே வகைமுறையாய் இருந்தது என்று நினைத்தவர்களாகக் காணப்படுகின்றனர். தேவனுடைய மக்கள் புறதெய்வ வணக்கத்தாரைப்போல் வாழ்ந்து அவர்களைப் போன்றே சிந்தித்தனர். ஒருவேளை அவர், “சரியான மனிதர் சரியான வேளையில் பலத்த புயத்துடனும் மாம்சத்துடனும் அரியணையை மேற்கொள்ள முடியும்” என்று பரிந்துரைத்த உறவினர்களையும் நண்பர்களையும் தம்மைச் சுற்றியிருந்திருக்கப் பெற்றிருக்கலாம். அவர் அவ்வகையான சிந்தனையினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டார், ஆனால் இந்தப் பாவம் நிறைந்த சிந்தனையானது ஒருவகையான விதைத்தலே என்பதை அவர் உணர்ந்தறியாதிருந்தார். இது அவர் அறுத்தாக வேண்டிய விளைச்சலுக்குப் பங்களிப்பதாயிருக்கும்.

நாம் வெற்றிடத்தில் வாழ்வதில்லை. இங்கு, துன்மார்க்கமான சிந்தைகளின் அசுத்த நீர்க்குட்டைகளிலிருந்து உமிழப்படுகிற எல்லா வகையான கருத்துக்களும் மிதந்து கொண்டுள்ளன. அந்த சிந்தனைகள் அனுமதிக்கப்பட்டால், அவைகள் நமது சிந்தனையின் பாகமாகக் கூடும். அவைகள் நமது சிந்தைகளில் உட்புகுந்தபின்பு, நமது பண்பாக உருமாறும்படி நகருகின்றன; பின்பு அவைகள் வார்த்தைகளிலும் செயல் களிலும் வெளிவருகின்றன. ஒருவருடைய இருதயக் கிணற்றில் உள்ளது எதுவாயிருப்பினும், அது அவரது பேச்சு மற்றும் செயல்கள் என்ற வாளியில் வெளிவந்தே தீரும் (மத்தேயு 12:25). அறுப்புக்காலம் வருகிறபோது, நாம்

“மற்றவர்களால் விதைக்கப்பட்டதன் விளைச்சலில் சிலவற்றை நான் அறுக்கின்றேன். அவைகள் என்மீது செல்வாக்குச் செலுத்தி என்னை மாற்றி யுள்ளன. அதைச் செய்யும்படி நான் அவற்றை அனுமதித்தேன், இப்போது அதற்கான விலையைச் செலுத்துகின்றேன்” என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். நீங்கள் அறுக்க வேண்டிய விளைச்சல் உங்கள்மீது செல் வாக்குச் செலுத்தியவர் யார் என்பது மறந்துபோன விஷயமாக உள்ளது; அது எதற்காக, ஏன், அல்லது எவ்வாறு விதைத்தீர்கள் என்பவற்றைப் பொருட்படுத்தாமல், நீங்கள் விதைத்தவற்றை அறுக்கச் செய்கிறது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, நான் திறமை வாய்ந்த ஒரு இளைஞரை கிறிஸ்துவக் கல்லூரிக் கல்வியில் சேரும்படி ஊக்குவித்தேன். அவர் கல்லூரிக்குச் செல்ல விரும்பினார், ஆனால் அவரது பெற்றோர் களிடத்தில் போதிய வசதியில்லை. தகுந்த ஊக்குவித்தலுடன், அவர்கள் ஒரு குடும்பம் என்ற வகையில் ஒன்றுகூடி அவர் ஒரு கிறிஸ்தவக் கல்லூரியில் சேர உதவினர். அவர்கள் வைத்திருந்த சேமிப்புத் தொகையொன்றை இதற்காகச் செலவிட முடிவு செய்தனர். அந்த இளைஞர் கோடை காலத்தில் தம்மால் இயன்ற அளவு பொருளீட்டுவதற்காக உழைத்தார். அவரது தாயார், அந்த இளைஞர் கல்லூரியில் படிக்கும் நான்கு ஆண்டு காலத்திற்கும் வேலை செய்யலாம் என்ற நம்பிக்கையுடன், ஒரு வேலைக்குச் சென்றார். அது ஒரு வெற்றிகரமான குடும்ப முயற்சியாக இருந்தது; அந்த இளைஞர் விரைவிலேயே கல்லூரியில் சேர்ந்தார். இந்த சாதனை இருந்தபோதிலும், அவரது வரலாறு ஒரு கவலைமிக்க முடிவை கொண்டிருந்தது. அந்த இளைஞருக்கு, உயர்வான ஒழுக்கக் கொள்கைகள் இல்லாத ஒரு அறைநண்பர் இருந்தார். காலம் ஆனபோது, அவரது அறைநண்பர் அவரைப் போதைப் பொருட்கள் பயன்படுத்தும் வழக்கத் திற்குள் வழிநடத்திச் சென்றார். கல்லூரி அதிகாரிகள் இதைக் கண்டறிந்த உடனே, அவரும் அவரது அறைநண்பரும், தங்களுக்கும் தங்கள் குடும்பத் திற்கும், கனவீனமும் தலைகுனிவும் ஏற்படும் வகையில் கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்கள் விதைத்தனர், அவர்கள் அறுத்தனர். அந்த இளைஞர் ஒரு நல்ல இளைஞர் என்பதை நான் அறிவேன். அவர் இன்னும் தூரம் சென்றிருக்க முடியும், ஆனால் அவர் இன்னொருவரின் விதைத்தலைத் தமது விதைத்தலாகும்படி அனுமதித்தார், கடைசியில் இன்னொருவரின் அறுப்பு அவரது அறுப்பாகியது.

நமது விதைத்தலுக்கும் அறுத்தலுக்கும் மற்றவர்கள் பங்களிக் கின்றனர். அவர்கள் அதைச் செய்யும்படி நாம் அனுமதிக்கின்றோம். எனவே, நாம் நமது சிந்தனைகள், தத்துவங்கள், நண்பர்கள், மற்றும் செயல்பாடுகளைக் கவனமாகத் தீர்மானிக்க வேண்டும்; ஏனெனில் அவை நாம் செய்கின்ற முழு விதைத்தல் மற்றும் நாம் செய்யப்போகின்ற முழு அறுத்தல் ஆகியவற்றில் உட்புகுந்து விடுகின்றன. உங்கள் சிந்தனைகளும் செயல்களும் உங்களிடம் இருந்து மட்டும் வந்தாலும் அல்லது அவைகள் இன்னொருவருடைய செல்வாக்கிற்கு உட்பட்டாலும், உங்கள் அறுத்தல் என்பது உங்கள் விதைத்தலுக்கு ஒத்திசைந்ததாக இருக்கும்.

## அறுவடை: மற்றவர்கள்மீது செல்வாக்குச் செலுத்தும் அறுப்பு

*சிம்ரியின் அறுத்தல் என்பது மற்றவர்களின் அறுத்தல்மீது செல்வாக்குச் செலுத்திற்று மற்றும் இனியும் செல்வாக்குச் செலுத்தும் என்பது, சிம்ரியைப் பொறுத்தமட்டில் நாம் காணும் நான்காவது உண்மையாக உள்ளது. சிம்ரியுடன் தொடர்புடைய எவரொருவரும் அந்தத்தொடர்புக்கு வருத்தப் படுவதற்காகவே வாழ்ந்தனர்.*

*சிம்ரி, "நல்ல விஷயங்கள் தகுதியானவருக்கும், முரட்டுத்தனமானவை, பெலமானவருக்கும் சென்று சேருகின்றன. பெரிய முட்டிகளைக் கொண்டவரே வெற்றியடைகின்றார்" என்று கூறும் செல்வாக்கு ஒன்றைப் பின்வைத்துச் சென்றார். உங்கள் வாழ்வுடன் வெளியே அனுப்ப இந்தச் செய்தி எவ்வளவு பயங்கரமானதாக உள்ளது! சிம்ரியின் வாழ்வு ஒரு பழமொழியானது (2 இராஜாக்கள் 9:31). அவர் ஏலாவைக் கொலை செய்ததற்காக நினைவில் வைத்திருக்கப்படுவார். ஒரு அரசரைக் கொலை செய்யும் எவரும் "சிம்ரி" என்று அழைக்கப்படுவார்கள். பின்விட்டுச் செல் வதற்கு என்னவொரு நற்பெயர்! நீங்கள், "ஒரு வேளை எவரொருவரும் சிம்ரியின் கூற்றைக் கவனிக்காமல் அல்லது அவர் செய்வதைக் கவனிக்காமல் இருந்திருக்கலாம். ஒருவேளை அவர்கள், அவர் போதித்த பாடத்தைப் புறக்கணிக்கும் அளவுக்கு சாமர்த்தியசாலிகளாய் இருந்திருக்கலாம்" என்று கூறலாம். சிலர், அவரது வசப்படுத்தும் வழிகளின் செல்வாக்கிற்கு உட்பட் டிருக்க வாய்ப்புள்ளது. சிம்ரியின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந் தவர்கள், அவர் அழிவு மற்றும் தோல்விக்குள் சென்றபோது, அதைக் கவனித்து வேறு வழியை மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கலாம், ஆனால் சிம்ரியின் வாழ்வு அவர்களைத் தொட்டதினால் இட்டுவைக்கப்பட்டிருந்த பண்பின் எச்சங்கள் சில அவர்களிடத்தில் நிலைத்திருக்கும்.*

*சமுதாயத்தில் பொதுவாக, சிம்ரியின் பங்களிப்பானது நல்ல சமுதாய வாழ்விற்கானதாக இன்றி, குளறுபடியை ஏற்படுத்துவதற்கு ஆனதாகவே இருந்தது. அவர் தமக்குப் பின்வருபவர்களுக்குப் பயணத்தைச் சுலப மாக்கும் தடங்கலற்ற சாலையை அல்ல, ஆனால் கண்ணீர்களின் தாரையையே பின்விட்டுச் சென்றார். சாலையை வேகத்தடையுள்ள தாக்கும் பாறைக்கற்களைப் பொறுக்கியெடுத்து விடுவதற்குப் பதிலாக, அவர் சில கற்களைச் சாலையில் தூக்கிப்போட்டு அவரைப் பின்பற்றிய வர்களுக்குப் பயணத்தைக் கடினமாக்கினார். சிம்ரிக்குப்பின் வருபவர்கள் வாழ்வை மிகவும் கடினமானதாகக் காண்பார்கள், ஏனெனில் அவர்கள் - தேர்ந்துகொண்டாலும் இல்லாவிட்டாலும் - சிம்ரியின் வாழ்வு உற்பத்தி செய்திருந்த அறுவடையில் பங்கேற்க வேண்டியிருந்தது. சிம்ரி பெரு வருத்தம் மற்றும் நம்பக்கூடாமை என்ற மேகத்தை விட்டுச் சென்றார், அதை இஸ்ரவேல் சமூகங்கள், நயத்துடன் இருத்தல், மதிக்கத்தக்கவா*

*றிருத்தல் மற்றும் தேவபயத்துடன் இருத்தல் ஆகியவற்றினால் மீண்டும் வெற்றிகொள்ள வேண்டியிருந்தது.*

*நீங்கள் ஒரு விளைச்சலை - நீங்கள் அறுத்தாக வேண்டிய ஒரு விளைச்சலை மற்றும், பிறர் குறைந்தபட்சம் ஒருபகுதியாவது, அறுத்தாக வேண்டிய விளைச்சலை - பின்வைத்துச் செல்லுகின்றீர்கள். அது என்ன வகையான விளைச்சலாக உள்ளது? எவரொருவரும் முற்றிலும் தம்மைக்கொண்டும், தமக்காகவும், மற்றும் தம்மாலே மட்டும் வாழ்வ தில்லை. நாம் யாவருமே ஒரு சமூகத்தில் வாழ்கின்றோம். நாம் பிறரின்மீது செல்வாக்குச் செலுத்துகின்றோம் மற்றும் பிறரால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றோம்.*

*இந்த உண்மையைப் பற்றி நாம் நினைக்கையில், பிள்ளைகளைப் பற்றி நினைக்காதிருப்பது நமக்குக் கடினமானதாக உள்ளது. அவர்கள் எவ்வாறு வளர்க்கப்பட வேண்டும் என்பதற்குத் தங்கள் பெற்றோர்களையோ அல்லது சமூகத்தையோ தாங்களாகவே தேர்ந்துகொள்ள முடியாது. ஒருநாளில், அவர்கள் தாங்கள் இருப்பதையும் தாங்கள் கொண்டுள்ள பெற்றோர் களுடன் தாங்கள் பிறந்த சமூகத்தில் வாழவேண்டியதையும் உணர்ந்தறி வார்கள். அந்த முதல் நாளில் இருந்து, அவர்கள் வேறு யாரேனும் நட்டுவைத்தவற்றின் விளைச்சலை அறுத்தலில் பங்கேற்கின்றனர். அவர்கள் தோட்டத்திலோ அல்லது அவர்களுக்கு முன்னதாகவே உண்டாக்கப்பட்டு இருக்கிற முட்புதரிலோ அவர்கள் வாழ்ந்தாக வேண்டும். அவர்கள் தங்களுக்கு முன்னதாகவே விதைக்கப்பட்டுள்ளவற்றின் விளைச்சலைச் சுதந்தரிக்கின்றனர். இந்த விதியின் உண்மையானது நம்மை நின்று நிதானிக்கச் செய்ய வேண்டும். நான் விதைத்தவற்றை, நான் மாத்திரம் அறுப்பதில்லை, ஆனால் மற்றவர்கள் - விசேஷமாக, நெருங்கிய மற்றும் அன்பானவர்கள்கூட - நான் விதைத்தவற்றில் இருந்து ஓரளவுக்கு அறுக்கின்றனர். அவர்கள், நான் ஏற்படுத்திக்கொண்ட தெரிவுகள் மற்றும் நான் வாழ்ந்துள்ள வாழ்க்கை ஆகியவற்றினால் நான் அவர்களுக்கு அளித்துள்ள அறுவடையின் வகைப்படி வாழ்வார்கள்.*

## *முடிவுரை*

*நிச்சயமாகவே, சிம்ரி தமது வாழ்வை வாழமுடிந்திருந்தால் - இது எவரொருவரும் பெற்றிருக்க இயலாத வாய்ப்பாகும் - அவர் அதைப்பற்றி வித்தியாசமான வகையில் சென்றிருப்பார். அவர் வேறொரு பாதையைத் தேர்ந்து கொண்டிருப்பார். அவர் வாழ்வில், விதைப்பதை ஜாக்கிரதை யாகவும் சிந்தனை நிறைவுடனும் கடந்து சென்றிருப்பார். பின்கண் ணோக்கு என்பது முன்கண்ணோக்கைவிட எப்போதும் மேன்மையானதாக உள்ளது. சிம்ரி தமது வாழ்வை மீண்டும் வாழ இயலாது. அவரது வாழ்வு முடிந்துவிட்டது. இருப்பினும், சிம்ரி, தமது வாழ்வைக் கொண்டு நமக்கு ஒரு எதிர்மறையான வகையில், அறிவுறுத்த முடியும். உண்மையில், தேவன் சிம்ரியின் சம்மதம் இன்றியே, அதைப்பற்றி நிச்சயப்படுத்தினார். சிம்ரியின் வாழ்வு பற்றிய இந்தச் சிறு வரலாற்றுக் குறிப்பில், அவர் செய்தவை "நீங்கள் விதைப்பதை நீங்கள் அறுப்பீர்கள்; நீங்கள் விதைத்தவற்றிற்கும் அதிகமாக*

*நீங்கள் அறுப்பீர்கள்; உங்கள் விளைச்சல்/அறுப்பு பிறரால் செல்வாக்குச் செலுத்தப்படும்; உங்கள் விளைச்சல்/அறுப்பு பிறரைச் செல்வாக்குக்கு உட்படுத்தும்'' என்று கூறுகிறது. அவரது வாழ்வு நாம் கேட்க அவசியமான ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கிக்கிறது. நாம் அதைக் கவனிப்போமா?*

*விதைத்தல் மற்றும் அறுத்தல் பற்றிய செய்தியொன்றைப் பிரசங்கித்த பிரசங்கியார் பற்றிய கதை ஒன்று கூறப்படுகிறது. அவர் ஒரு வலிவுநிறைந்த நடையில், எவரொருவரும் விளைச்சலை மாற்ற முடியாது என்று அறிவித்தார். "நாம் விதைக்கின்றோம், நாம் விதைத்துள்ளவற்றை நாம் அறுப்போம்," என்று அவர் பலத்த குரலில் அறிவித்தார். அந்தப் பிரசங்கத் திற்குப் பின்பு, அவரிடத்தில் யாரோ ஒருவர், "நாம் விதைத்துள்ளவற்றை நாம் அறுத்தாக வேண்டும் என்றால், நாம் ஏன் கிறிஸ்தவர்களாக வேண்டும்? எப்படியும், நாம் ஏற்கனவே விதைத்துள்ளவற்றை ஏற்கனவே அறுக்கப் போகின்றோம். கிறிஸ்தவராகுதல் என்பது அதை மாற்றப்போவதில்லையே" என்று கேட்டார். அந்தப் பிரசங்கியார் ஒரு கணம் சிந்தித்துவிட்டுப் பின்பு, ''ஆம், நீங்கள் கூறுவது சரியே. நாம் விதைத்துள்ளவற்றை நாம் திரும்ப பெறுகின்றோம். பூமிக்குரிய அறுவடையானது நாம் கிறிஸ்தவராகி விட்டதால் மாத்திரம் நீக்கப்படாது, ஆனால் கிறிஸ்தவர்கள், இதுவரை யிலும் தவறாகச் செலவிடப்பட்டுள்ள வாழ்வில் இருந்து அறுக்கப்பட்டாக வேண்டிய அறுவடையை எதிர்கொள்வதில், தங்களுக்கு உதவுவதற்காக தேவனையும், கிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியையும், மற்றும் சபையையும் கொண்டுள்ளனர்'' என்று பதில் அளித்தார். அவர் சரியாகவே கூறினார், ஆனால் இன்னொரு சிந்தனையும் இவ்விடத்தில் கூட்டப்பட்டாக வேண்டும்: கிறிஸ்தவராகுதல் என்பது தனிநபர் ஒருவர் நேற்றைய தினத்தில் இருந்து பெற்ற அறுவடையைக் கையாள உதவுவது மாத்திரமின்றி, நாளைய தினத்திற்கும் மற்றும் நித்தியத்திற்குமான விதைத்தலின் சரியான வகையைச் செய்ய அவசியமான இயக்குதலையும் அவருக்கு/அவளுக்குக் கொடுக்கும்.*

***கற்க வேண்டிய பாடம்:***
***நீங்கள் எவ்வாறு விதைக்கின்றீர்கள் என்பது பற்றி***
***எச்சரிக்கையாய் இருங்கள்.***
***ஏனென்றால் நீங்கள் விதைத்துள்ளவற்றின்படியே***
***நீங்களும் மற்றவர்களும் அறுப்பீர்கள்.***